11 DEC 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 2.

மாசி 18, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.''

பின்னர் கிடைக்கப்போகும் ஆதாயத்தை நினைந்து, தற்சமயம் தன் கையில் உள்ள மூலதனத்தை இழக்கக்கூடிய செயலைச் செய்யுமாறு அறிவுடையார் தூண்டமாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கீழ்பவானி பாசனப் பகுதியில் மின் இணைப்பு பெறுவதற்கான நிபந்தனைகள்.

*வினா எண். 301—திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் கீழ்பவானி பாசனப் பகுதியில் விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு தனி நிபந்தனைகள் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கீழ்பவானி திட்டப் பகுதிகளில் 3—11—1967 நாளிட்ட பொதுப்பணி (நீர்ப்பாசனம்) துறையின் ஆணைக்கிணங்க மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. இப் பகுதிக்கென வேறு புதிய நிபந்தனைகள் ஏதும் இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கீழ்பவானிப் பாசனப் பகுதியில் மின்னிணைப்புப் பெறுவதற்கு நிலத்தடி நீர் சான்றிதழ் பெற வேண்டுமென்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. அப்படிப்பட்ட நிபந்தனை நீக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த கீழ்பவானி பாசனப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கென இருக்கிற விதிமுறைகளில் நிலத்தடி நீரைப் பற்றிய சான்றிதழ் தேவை என்றில்லை. பாசனப் பகுதிகளைப் பாதிக்காத வகையில் அவை அமைய வேண்டுமென்றும், பாசன காலங்களில் மின்விசையைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அத்தகைய கட்டுப்பாடுகளே உள்ளன.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பவானிப் பாசனப் பகுதியில், டிஸ்டன்ஸ் என்று வைத்து, 150 அடி உள்ளே இருக்கிற கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியாது என்று அப்ஜக்ஷன் செய்கிறார்கள். அதை அரசு தளர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிற்றாறுகளைப் பொறுத்தவரை 50 மீட்டர் தொலைவு வரை 5 குதிரைத் திறனுக்கு மேற்படாமலும் 50 மீட்டர் தொலைவைக் கடந்து அமைந்துள்ள களத்தின் நிலைகளைப் பொறுத்து 10 குதிரைத் திறனுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டுமென்பதே அரசின் விதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பாசனத்துறைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

சென்னை அடையாற்றில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 302—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அடையாற்றில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

(இ) எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அடையாற்றில் 110/33 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசின் திட்டக்குழு 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒப்புதல் அளித்துள்ளது. இது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) இத்துணை மின் நிலையம் 1983-84 ஆம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கு சுமார் 137 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.